[பேரவைத் தலைவர்] [2006 ஜனவரி 16

திரு. வெ. தமிழரசு அவர்கள், ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991 முதல் 1996 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம்.கே. சோமசுந்தரம் அவர்கள், அன்றைய திருநெல்வேலி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 முதல் 1962 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம். அண்ணாமலை அவர்கள், அரூர் தனித் தொகுதியிலிருந்து இரு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1977 முதல் 1980 வரை மற்றும் 1989 முதல் 1991 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்.

அன்னார்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. இரங்கல் தீர்மானங்கள்

### (அ) சென்னை வியாசர்பாடி மற்றும் எம்.ஜி.ஆர். நகர் வெள்ள நிவாரண மையங்களில் கூட்ட நெரிசலில் நேர்ந்த உயிரிழப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னை, வியாசர்பாடி மற்றும் எம்.ஜி.ஆர் நகர் வெள்ள நிவாரண மையங்களில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் நேர்ந்த மனித உயிரிழப்புகள் குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

"6–11–2005 அன்று சென்னை, வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசுக் கலைக் கல்லூரி வெள்ள நிவாரணம் வழங்கும் மையத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 6 பேரும், 18–12–2005 அன்று சென்னை எம்.ஜி.ஆர் நகரில் உள்ள அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வெள்ள நிவாரணம் வழங்கும் மையத்தில் ஏற்பட்ட

கூட்ட நெரிசலில் 42 பேரும் உயிரிழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இச்சம்பவங்களில் உயிரிழந்தவர்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களைப் பிரிந்து வாடும் உற்றார் உறவினர்களுக்கு அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது. மேலும், இவ்விபத்துகளில் காயமுற்றோருக்கும் ஆறுதலை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

### (ஆ) பட்டுக்கோட்டை அருகிலும் திருவாடானை அருகிலும் மழை வெள்ளத்தால் பேருந்துப் பயணிகள் அடித்துச் செல்லப்பட்டதில் ஏற்பட்ட உயிரிழப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பட்டுக்கோட்டை அருகிலும், திருவாடானை அருகிலும் சமீபத்திய மழை வெள்ளத்தால் பேருந்துப் பயணிகள் அடித்துச் செல்லப்பட்டதில் ஏற்பட்ட மனித உயிரிழப்புகள் குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

"25-11-2005 அன்று தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து புறப்பட்ட பேருந்து, பட்டுக்கோட்டைக்கு அருகே காட்டாற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தின் மேல் செல்கையில் கனமழையால் சாலையில் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தில் சிக்கியதால் 53 பேரும், இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானைக்கு அருகில் சருகணி ஆற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தின் மேல் வந்த வெள்ளத்தில் சிக்கிய பயணிகள் பேருந்து அடித்துச் செல்லப்பட்டதால் 38 பேரும் உயிரிழந்தது குறித்தும், ஏராளமானோர் காயமுற்றது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இவ்விபத்துகளில் அகால மரணமடைந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அவர்களைப் பிரிந்து வாடும் உற்றார் உறவினர்களுக்கு அனுதாபத்தினையும், இச்சம்பவத்தில் காயமுற்றோருக்கு ஆறுதலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இத்தீர்மானங்களை நிறைவேற்றுமுகத்தானும், இவ்விரு நிகழ்வுகளிலும் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும்வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)*

சட்டமன்றம் LEGISLATURE TAMIL NADU SECRETARIAT வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS